அந்தரங்கமானது

NEW

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020
## (புதிய பாடத்திட்டம்)

## 25B - ஐரோப்பிய வரலாறு



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020
## 25B - ஐரோப்பிய வரலாறு (புதிய பாடத்திட்டம்)
## புள்ளி வழங்கும் திட்டம்

- I பகுதி - 01 x 40 = 40

  II பகுதி - பகுதி A
  1 ஆம் வினா = 12

  பகுதி B, C
  ஒவ்வொரு பகுதியிலிருந்தும்
  ஒரு வினாவையேனும் தெரிவு
  செய்து மூன்று வினாக்கள்
  (16 × 3) = 48

  II ஆம் பகுதிக்கு மொத்தப் புள்ளி = 60

இறுதிப்புள்ளி = 40 + 60 = 100

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ △ 4/5
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ △ 3/5
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ △ 3/5
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

o o o

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

යුරෝපා ඉතිහාසය II (I කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி I)
History of Europe II (Part I)

25 B T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

ஐரோப்பிய வரலாறு - கிரேக்க - உரோமர் காலம் முதல் கி.பி. 1989 வரை

சுட்டெண் : ........................

**அறிவுறுத்தல்கள் :**

* இப்பகுதி **40** வினாக்களை கொண்டுள்ளது. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் தரப்படுள்ள **ஐந்து** தெரிவுகளில் **ஒன்று** மட்டுமே சரியானது. அச்சரியான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கேற்பக் குறிப்பிடுக.**
* இப்பகுதிக்கு **40 புள்ளிகள்** வழங்கப்படும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதிய பின்னர், **பகுதி I** இன் விடைத்தாள்களை **பகுதி II** இன் விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

## பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் **ஒன்று** ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**1.** (1) மர்மரா (2) ஏஜியன் (3) அட்ரியாற்றிக் (4) ஆட்டிக் (5) போல்டிக் (.........)

**2.** (1) ஸ்பாட்டா (2) கோரின்ந் (3) அதென்ஸ் (4) மிலெடஸ் (5) கோல் (.........)

**3.** (1) அகடமி (2) லைசியம் (3) கொலோசியம் (4) ஒக்ஸ்போட் (5) கேம்பிரிட்ஜ் (.........)

**4.** (1) தொலமி (2) வெர்ஜில் (3) ஹொரஸ் (4) ஒவிட் (5) ஜுவெனல் (.........)

**5.** (1) தைபீரியஸ் (2) குளோடியஸ் (3) ட்ராஜன் (4) மார்க்கஸ் அவுரேலியஸ் (5) சார்ளிமேன் (.........)

**6.** (1) தியூடர் (2) பூர்பன் (3) ஸ்ருவர்ட் (4) ஹனோவர் (5) வின்ட்சர் (.........)

**7.** (1) முதலாம் ஜேம்ஸ் (2) முதலாம் சார்ள்ஸ் (3) ஒலிவர் குறோம்வெல் (4) இரண்டாம் சார்ள்ஸ் (5) இரண்டாம் ஜேம்ஸ் (.........)

**8.** (1) சார்ள்ஸ் கலோன் (2) அபேசியஸ் (3) மீராபோ (4) ஜீன் போல் மராத் (5) ஜோர்ஜ் ஜக் டன்ரன் (.........)

**9.** (1) முதலாம் சார் அலெக்சான்டர் (2) பதினெட்டாம் லூயி (3) கிளமென்ஸ் வொன் மெற்றர்ணிக்
(4) காசல்ரீ (5) கால் பொன் ஹாடென் பேக் (.........)

**10.** (1) அயிலா ஷப்பெல் காங்கிரஸ் (2) ட்ரோபோ காங்கிரஸ் (3) லைபக் காங்கிரஸ்
(4) வெரோனா காங்கிரஸ் (5) பேர்ளின் காங்கிரஸ் (.........)

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப் பெயர்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**11.** (1) பெலபொனீசியன் போர் - அதென்ஸ்சும் ஸ்பாட்டாவும்
(2) பியூனிக் போர்கள் - உரோமும் கார்த்தேஜுவும்
(3) சிலுவை யுத்தம் - பிரான்ஸ்சும், இங்கிலாந்தும்
(4) கிரிமியன் போர் - ரஷ்யாவுக்கு எதிராக இங்கிலாந்தும் பிரான்ஸ்சும்
(5) ஏழு கிழமைப் போர் - ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் (.........)

**12.** (1) ஜுப்பிற்றர் - விண்ணுக்கு அதிபதி
(2) மார்ஸ் - சூரியக் கடவுள்
(3) மினர்வா - ஞானத்தினதும் கைப்பணியாளர்களினதும் அதிபதி
(4) வீனஸ் - காதலுக்கு அதிபதி
(5) நெப்டியூன் - கடலுக்கு அதிபதி (.........)

**13.** (1) லிவீ - உரோமன் வரலாறு
(2) ரஸிடஸ் - வரலாறுகள் (Histories)
(3) புனித அகஸ்தீன் - கடவுளின் நகரம் (City of God)
(4) புனித தோமஸ் அகுனாஸ் - சும்மா தியோலிஜிகா
(5) தோமஸ் ஹொப்ஸ் - இளவரசன் (.........)

**14.** (1) வலோய் - பாதுவா
(2) ஸ்போர்ஸா - மிலான்
(3) மெடிஸி - புளோரன்ஸ்
(4) எஸ்ரெ - பெரரா
(5) கொன்சகா - மந்துவா (.........)

**15.** (1) மகோன்னத புரட்சி - பாராளுமன்றத்தின் வெற்றி
(2) அமெரிக்கப் புரட்சி - உரிமை மனு
(3) பிரான்ஸியப் புரட்சி - மனித உரிமை பிரகடனம்
(4) சர்வதேச சங்கம் - மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனம்
(5) ரஷ்யப் புரட்சி - பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் (.........)

● **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பெயர்/ கூற்று/ காலம் என்பன **X, Y** நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் பெயர்/ கூற்று/ காலம் என்பவை **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோவொரு வகையில் பொருந்தக்கூடியதாகும். எனினும் அவை தரப்பட்டுள்ள வகையில் பொருந்தக் கூடிய முறையில் இல்லை. **Y** நிரல் **X** நிரலுடன் பொருந்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டால் கீழே தரப்பட்டுள்ள சேர்மானங்கள் ஐந்தில் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தினை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) பிளேட்டா | A "இளவரசன் சிங்கத்தையும் நரியையும் போல பாவனை செய்ய வேண்டும்" |
| (ii) இயேசு கிறிஸ்து | B "மனிதன் சுதந்திரமாகப் பிறந்துள்ளான். ஆனால் எல்லா இடங்களிலும் அவன் சங்கிலியால் கட்டப்பட்டுள்ளான்" |
| (iii) மக்கியவெல்லி | C "அனைத்து நாடுகளின் தொழிலாளர்களே ஒன்றிணையுங்கள்" |
| (iv) ரூசோ | D "தத்துவவியலாளர்கள் அரசராக வேண்டும்" |
| (v) கார்ள் மாக்ஸ் | E "சீசருக்குக் கிடைக்க வேண்டியதை சீசருக்கும், கடவுளுக்குக் கிடைக்க வேண்டியதை கடவுளுக்கும் வழங்குங்கள்" |

(1) ABECD (2) AEDCB (3) BAECD (4) DEABC (5) DEBAC (.........)

**17.** X / Y

(i) மைக்கல் அஞ்சலோ — A அமெரிக்கப் புரட்சி
(ii) மார்டின் லூதர் — B பயன்பாட்டு வாதம்
(iii) வோல்டயர் — C மதச் சீர்திருத்தம்
(iv) ஜோர்ஜ் வாஷிங்டன் — D இத்தாலிய மறுமலர்ச்சி
(v) ஜெரமி பெந்தம் — E ஞானோதயம்

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EACDB (5) ECADB (.........)

**18.** X / Y

(i) நிக்கலஸ் கொபர்ணிகஸ் — A ஜேர்மனியர்
(ii) ஜொஹனஸ் கெப்லர் — B போலந்தர்
(iii) கலிலியோ கலிலி — C ஸ்பானியர்
(iv) மைக்கேல் சர்வேட்டஸ் — D ஆங்கிலேயர்
(v) வில்லியம் ஹார்வே — E இத்தாலியர்

(1) ABDEC (2) BADEC (3) BAECD (4) BEACD (5) CDAEB (.........)

**19.** X / Y

(i) வேர்செயில்ஸ் உடன்படிக்கை — A ஆஸ்திரியா
(ii) புனித ஜெர்மன் உடன்படிக்கை — B ஹங்கேரி
(iii) நியுலி உடன்படிக்கை — C துருக்கி
(iv) ட்ரியனொன் உடன்படிக்கை — D பல்கேரியா
(v) லௌசன் உடன்படிக்கை — E ஜேர்மனி

(1) ACEDB (2) AEDBC (3) DECAB (4) EADBC (5) EDACB (.........)

**20.** X / Y

(i) மார்ஷல் டிட்டோ — A பிரான்ஸின் நான்காவது குடியரசின் முதலாவது ஜனாதிபதி
(ii) சார்ள்ஸ் டி கால் — B II ஆம் உலகப் போரின் பின்னர் பிரித்தானியாவின் முதலாவது பிரதம மந்திரி
(iii) கிளமன்ட் அட்லி — C யூகோஸ்லாவியாவின் ஜனாதிபதி
(iv) ட்ரிக்விலீ — D பிரித்தானியாவின் முதலாவது பெண் பிரதம மந்திரி
(v) மாகிரட் தச்சர் — E ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுச் செயலாளர்

(1) BAECD (2) CABED (3) CEABD (4) DECBA (5) EDABC (.........)

● **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று **உரிய தலைப்பிற்கு பொருந்தாதுள்ளது.** அதனை தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**21. புராதன உரோமின் அரசியல்**

(1) உரோம் இலத்தின் நகர அரசாக ஆரம்பித்தது.
(2) ஆரம்பத்தில் உரோம் அரசன் ஒருவனால் ஆளப்பட்டது.
(3) கி.மு. 6 ஆம் நூற்றாண்டின் இறுதியில் உரோம் ஒரு குடியரசானது.
(4) உரோம அரசியலில் பிளேட்டோவின் தத்துவங்கள் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தின.
(5) அகஸ்தஸின் கீழ் உரோம் பேரரசு ஆனது. (.........)

**22. மறுமலர்ச்சி**

(1) மறுமலர்ச்சி இத்தாலியில் ஆரம்பமானது.
(2) மறுமலர்ச்சி மதச் சீர்திருத்த இயக்கத்தின் ஒரு நேரடி விளைவாகும்.
(3) மறுமலர்ச்சி ஐரோப்பாவில் நவீனத்துவத்தின் பிறப்பினைக் குறிப்பிடுகிறது.
(4) மறுமலர்ச்சியின் முனைப்பான சாதனைகளை கலைத்துறையில் காணலாம்.
(5) மறுமலர்ச்சி ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து ஸ்பானிய ஆகிய நாடுகளுக்கும் பின்னர் பரவியது. (.........)

**23. முப்பதாண்டுப் போர்**
(1) முப்பதாண்டுப் போரின் முக்கிய நிலையமாக ஜெர்மனி விளங்கியது.
(2) முப்பதாண்டுப் போர் கத்தோலிக்கருக்கும் புரட்டஸ்தாந்தினருக்கும் இடையில் ஏற்பட்டது.
(3) முப்பதாண்டுப் போர் புனித உரோமப் பேரரசின் வெற்றியுடன் முடிவடைந்தது.
(4) வெஸ்ட்பேலியா சமாதான உடன்படிக்கையினால் அமைதி மீண்டும் ஏற்படுத்தப்பட்டது.
(5) முப்பதாண்டுப் போர் ஐரோப்பாவில் ஏற்பட்ட இறுதியான சமயப் போர் ஆகும். (.........)

**24. பிரான்ஸியப் புரட்சி**
(1) புரட்சிக்கு முன் பிரான்ஸிய சமூகம் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
(2) பிரான்ஸியப் புரட்சி ஏற்பட நிதி நெருக்கடியே உடனடிக் காரணமாகும்.
(3) பிரான்ஸியப் புரட்சியின் ஆரம்பத்தைக் குறிப்பதாகப் பஸ்ரீல் தாக்கப்பட்டது.
(4) பிரான்ஸியப் புரட்சியின் போது 16 ஆம் லூயி மன்னன் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டான்.
(5) 17 ஆம் லூயி மன்னன் 16 ஆம் லூயி மன்னனின் பின் அரசனானான். (.........)

**25. இத்தாலியை ஒன்றிணைத்தல்**
(1) வியன்னா உடன்படிக்கையினால் இத்தாலி வெவ்வேறான பல அரசுகளாகப் பிரிக்கப்பட்டது.
(2) 1815 இலிருந்து 1848 வரை இத்தாலியை ஒன்றிணைப்பதற்குப் பல வெற்றியளிக்காத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
(3) பாப்பாண்டவரின் ஆசீர்வாதத்துடன் இத்தாலியின் ஒன்றிணைப்பு அடையப்பட்டது.
(4) சார்டினியா - பீட்மன்ட் தலைமைத்துவத்தின் கீழ் இத்தாலி ஒன்றிணைக்கப்பட்டது.
(5) இத்தாலியின் ஒற்றுமைக்கு கவூர் என்பவரே பிரதான காரணகர்த்தா ஆவார். (.........)

● **26** தொடக்கம் **30** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு **மாற்று விடைகள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளை தெரிவுசெய்து கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளைக் குறிப்பிடுக.

(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ........................ 1 எனவும்,
(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ........................ 2 எனவும்,
(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ........................ 3 எனவும்,
(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ........................ 4 எனவும்,
வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்க்கை சரியாயின்........................ 5 எனவும்

**அடைப்புக் குறியினுள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் |

**26. பின்வருவனவற்றுள் தேசிய அரசுகள் தொடர்பான கூற்றுகளில் சரியானது / சரியானவை எது / எவை**
(A) 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் தேசிய அரசுகள் ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தோற்றம் பெற்றன.
(B) தேசிய அரசுகளின் ஒரு அங்கமாக வலுவான நிலையான இராணுவம் காணப்பட்டது.
(C) தேசிய அரசுகளில் அரசனின் அதிகாரம் வரையறுக்கப்பட்டிருந்தது
(D) மானிய முறைப் பிரபுக்கள் நிர்வாகத்துறையில் அதிகாரமிக்க குழுவினராகச் செயற்பட்டனர். (.........)

**27. பின்வருவனவற்றுள் இங்கிலாந்து பாராளுமன்ற அரசியல் முறை தொடர்பான கூற்றுகளில் சரியானது / சரியானவை /எது / எவை**
(A) ஸ்ருவர்ட் அரசர்கள் பாராளுமன்றத்தை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டனர்.
(B) 1832 சீர்திருத்தச் சட்டம் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைத்தது.
(C) 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் கட்சிமுறை வளர்ச்சியடைந்தது.
(D) 1928 இல் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. (.........)

**28. பின்வருவனவற்றுள் அமெரிக்கப் பரட்சி தொடர்பான கூற்றுகளில் சரியானது /சரியானவை /எது / எவை**

(A) அமெரிக்கப் புரட்சி கடல்கடந்த குடியேற்ற நாடு ஒன்று ஐரோப்பிய பேரரசு ஆதிக்கத்துக்கு எதிராகப் போரிட்டு வெற்றியடைந்த முதலாவது சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுகிறது.

(B) பிரித்தானிய ஆட்சியாளரால் விதிக்கப்பட்ட வரிகளே அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்பட காரணமான ஒரு முக்கிய விடயமாகும்.

(C) பிரான்ஸ், அமெரிக்காவுக்கு எதிராக பிரித்தானியருக்கு உதவி அளித்தது.

(D) சுதந்திரப் பிரகடனமானது 1776 ஜூலை 4 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (.........)

**29. பின்வருவனவற்றுள் முதலாம் உலகப் போர் தொடர்பான கூற்றுகளில் சரியானது /சரியானவை /எது / எவை**

(A) முதலாம் உலகப் போர் ஆரம்பமானபோது ஜெர்மனியின் சான்ஸிலராக பிஸ்மார்க் இருந்தான்.

(B) முதலாம் உலகப் போரின் ஆரம்பத்தில் இத்தாலி ஜேர்மனியுடன் இணைந்து கொண்டது.

(C) ஆஸ்திரியாவின் பிரான்சிஸ் பேர்டினட் சரஜிவோவில் கொலை செய்யப்பட்டமையே முதலாம் உலகப்போருக்கான உடனடிக் காரணமாகும்.

(D) வேர்சேயில் உடன்படிக்கை முதலாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. (.........)

**30. பின்வருவனவற்றுள் இரண்டாம் உலகப் போர் தொடர்பான கூற்றுகளில் சரியானது /சரியானவை /எது / எவை**

(A) ஜேர்மனி, இத்தாலி ஜப்பான் என்பன அச்சு வல்லரசுகள் என அழைக்கப்பட்டன.

(B) ஜேர்மனியினால் லுசிடானியா கப்பல் மூழ்கடிக்கப்பட்டமையே அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில் ஈடுபடுவதற்கு வழியேற்படுத்தியது

(C) ஹிரோஷிமா, நாகசாகி என்பன மீது அணுகுண்டுகள் வீசப்பட்டதுடன் இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தது.

(D) இரண்டாம் உலகப் போரின் பின் சர்வதேச சங்கம் தாபிக்கப்பட்டது. (.........)

- **31** தொடக்கம் **35** வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**31. கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகரம் எது?**

(1) உரோம் (2) அலெக்சாந்திரியா (3) ஜெருசலேம்
(4) கொன்ஸ்தாந்திநோபிள் (5) டமஸ்கஸ் (.........)

**32. வீனஸின் பிறப்பு (Birth of Venus) என்ற ஓவியத்தை வரைந்த புகழ்பெற்ற ஓவியக் கலைஞர் யார்?**

(1) மஸசியோ (2) சாந்திரோ பொட்செலி (3) லியனார்டோ டாவின்சி
(4) ரிரியன் (5) ராபேல் (.........)

**33. இத்தாலியை ஐக்கியப்படுத்தும்போது சார்டீனியாவை ஆண்ட மன்னன் யார்?**

(1) பத்தாம் சார்ள்ஸ் (2) லூயிஸ் பிலிப் (3) சார்ள்ஸ் அல்பேர்ட்
(4) விக்டர் இமானுவேல் II (5) முதலாம் வில்லியம் (.........)

**34. தொடர்புடைமை வாதத்தை (Theory of Relativity) முன் வைத்தவர் யார்?**

(1) லூயி பாஸ்ரர் (2) மேரிகியூரி (3) சார்ள்ஸ் டார்வின்
(4) சிக்மன்ட் புரோயிட் (5) அல்பேர்ட் அயின்ஸ்ரீன் (.........)

**35. ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது ஆசியரான பொதுச் செயலாளர் யார்?**

(1) யூ தாண்ட் (2) நீ வின் (3) குர்ட் வொல்ட்ஹெயிம்
(4) மொரார்ஜி தேசாய் (5) பெரெஸ்டி குவலோர் (.........)

● **36** தொடக்கம் **40** வரையிலான வினாக்களில் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக் குறியினுள்** எழுதுக.

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதல்** கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| **36.** | உரோமப் பேரரசின் வடக்கு எல்லைக்கு அப்பால் வாழ்ந்த ஜெர்மன் குலத்தவர் மிலேச்சர்கள் என அழைக்கப்பட்டனர். | மேற்கு உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமான முக்கிய காரணி மிலேச்சர்களின் ஆக்கிரமிப்பாகும். | (.........) |
| **37.** | பதினைந்தாம்/ பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் பொருளாதாரத்துறையில் அடிப்படை மாற்றமொன்றைக் காணக்கூடியதாயிருந்தது. | ஐரோப்பாவின் நவீன கால ஆரம்பத்தில் வர்த்தகம் பெருமளவு விரிவடைந்ததுடன் மத்தியகால பொருளாதார அமைப்பு முறைகளுக்குப் பதிலாக முதலாளித்துவம் வளர்ச்சியடைந்தது. | (.........) |
| **38.** | எட்டாம் ஹென்றி மன்னன் இங்கிலாந்து திருச்சபையின் தலைவனாகத் தன்னை நியமித்ததுடன், தனது செயற்பாட்டைப் பாராளுமன்றம் மூலம் அங்கீகரிக்கவும் செய்தான். | எஸ்ரேற் ஜெனரல் சபையை கூட்டியமையே அமெரிக்கப்புரட்சி ஏற்படுவதற்கு வழியேற்படுத்தியது. | (.........) |
| **39.** | 1789 இலிருந்து 1848 வரையான புரட்சிக் காலத்தில் பிரான்ஸில் சார்ட்டிஸ்ற் இயக்கம் வளர்ச்சியடைந்தது. | 1848 இல் லூயி நெப்போலியன் இரண்டாம் பிரான்ஸியக் குடியரசின் ஜனாதிபதி ஆனான். | (.........) |
| **40.** | லெனினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையை ஜோசப் ஸ்டாலின் தொடர்ந்து முன்னெடுத்தான். | ஜோசப் ஸ்டாலினுடைய வெளிநாட்டுக் கொள்கை மேற்கு நாடுகளுடன் சமாதான சகவாழ்வை நோக்காகக் கொண்டிருந்தது. | (.........) |

❋❋

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

### නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம் **25B** විෂයය / பாடம் **ஐரோப்பிய வரலாறு**

### ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 3 | 21. | 4 | 31. | 4 |
| 02. | 5 | 12. | 2 | 22. | 2 | 32. | 2 |
| 03. | 3 | 13. | 5 | 23. | 3 | 33. | 4 |
| 04. | 1 | 14. | 1 | 24. | 5 | 34. | 5 |
| 05. | 5 | 15. | 4 | 25. | 3 | 35. | 1 |
| 06. | 2 | 16. | 4 | 26. | 1 | 36. | 2 |
| 07. | 3 | 17. | 1 | 27. | 4 | 37. | 5 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 5 | 38. | 1 |
| 09. | 2 | 19. | 4 | 29. | 4 | 39. | 4 |
| 10. | 5 | 20. | 2 | 30. | 2 | 40. | 3 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

යුරෝපා ඉතිහාසය II (II කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி II)
History of Europe II (Part II)

25B T II

## ஐரோப்பிய வரலாறு - கிரேக்க - உரோமர் காலம் முதல் கி.பி. 1989 வரை

**அறிவுறுத்தல்கள் :**

* **முதலாம்** வினா கட்டாயமானது.
* **B, C** ஆகிய பகுதிகளிலிருந்து ஆகக் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து **மூன்று** வினாக்களுக்கு விடை தருக. முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை **நான்கு** ஆகும்.
* (**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **ஐரோப்பாவின் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

## பகுதி A

**1.** உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்ட **அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

(i) பிரனீஸ் மலைத்தொடர் (ii) கருங்கடல் (iii) கொன்ஸ்தாந்திநோபிள்
(iv) ஸீன் நதி (v) லண்டன் (vi) பால்டிக்கடல்
(vii) ஆங்கிலக் கால்வாய் (viii) ரைன்நதி (ix) லிஸ்பன்
(x) சுவிட்சர்லாந்து (xi) சுவீடன் (xii) கோர்சிக்கா

(சரியாகக் குறித்துப் பெயரிடப்படும் ஒவ்வொன்றிற்கும் **01** புள்ளி)

## பகுதி B

**2.** பின்வரும் தலைப்புகளில் புராதன கிரேக்க கலாசாரத்தின் முனைப்பான பண்புகளைப் பரிசீலிக்குக
(i) அரசியல் முறை
(ii) சமயம்
(iii) இலக்கியம் (16 புள்ளிகள்)

**3.** "நாடுகாண் பயணங்கள் ஏற்படுவதற்குப் பல்வேறு பொருளாதார, அரசியல், சமயம்சார் விடயங்கள் காரணங்களாகும்."

(i) ஆரம்பகால நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு வழங்கிய போர்த்துக்கேய இளவரசனின் பெயரினைத் தருக. (01 புள்ளி)

(ii) ஆரம்பகால நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட போர்த்துக்கேய நாடுகாண் பயணி **ஒருவரினதும்**, ஸ்பானிய நாடுகாண் பயணி **ஒருவரினதும்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) போர்த்துக்கல் **அல்லது** ஸ்பானியாவினால் முன்னெடுக்கப்பட்ட நாடுகாண் பயணங்கள் பற்றிச் சுருக்கமாக எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) நாடுகாண் பயணங்கள் ஏற்படுவதற்குப் பல்வேறு அரசியல், பொருளாதார, சமயம்சார் அம்சங்கள் காரணமாகிய விதத்தினை பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

4. (i) கைத்தொழில் புரட்சி முதலில் இங்கிலாந்தில் ஏற்படுவதற்குக் காரணமான விடயங்களைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

(ii) கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட தொழில்நுட்ப, பொருளாதார, சமூக விளைவுகளைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) உரோமப் பேரரசில் கிறிஸ்தவத்தின் வெற்றி

(ii) எதிர்மதச் சீர்திருத்தம்

(iii) பதினான்காம் லூயி

(iv) இங்கிலாந்தில் மகோன்னத புரட்சி

(ஒவ்வொன்றுக்கும் 08 புள்ளிகள்)

## பகுதி C

6. (i) நெப்பொலியன் போனபார்ட் பிரான்சில் அதிகாரத்தைக் கைப்பற்றிய முறையினைப் பரிசீலிக்குக (05 புள்ளிகள்)

(ii) நெப்பொலியன் போனபார்ட்டின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு அவனுடைய சாதனைகளை மதிப்பிடுக. (11 புள்ளிகள்)

7. "ஜெர்மனியை ஐக்கியப்படுத்தல் பிரஷ்யாவின் பணியாக இருந்தது"

(i) பிரஷ்யாவின் தலைமையில் அமைக்கப்பட்ட சுங்க சங்கத்தின் பெயரினைத் தருக. (01 புள்ளி)

(ii) 1848 இன் முன்னர் ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவதற்கு எதிராக நிலவிய **இரண்டு** தடைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) பிஸ்மார்க் பிரஷ்யாவின் சான்சிலர் பதவியை அடைந்த முறையினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக (02 புள்ளிகள்)

(iv) ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் முக்கிய கட்டங்களில் கவனம் செலுத்தி ஜேர்மனியை ஐக்கியப்படுத்துதலில் பிரஷ்யாவின் வகிபாகத்தைப் பரிசீலிக்குக. (11 புள்ளிகள்)

8. இரண்டாம் உலகப் போரின் முக்கிய விளைவுகளைப் பகுப்பாய்வு செய்க. (16 புள்ளிகள்)

9. பின்வருவனவற்றில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) ஜேர்மனியில் நாஸிசம்

(ii) ஜோசப் ஸ்டாலின்

(iii) ஐக்கியநாடுகள் சபையின் இலக்குகளும், அமைப்பும்

(iv) பனிப்போர்

(ஒவ்வொன்றுக்கும் 08 புள்ளிகள்)

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

NEW


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

| | | |
|---|---|---|
| යුරෝපා ඉතිහාසය II<br>ஐரோப்பிய வரலாறு II<br>History of Europe II | 25B | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. } 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. } ..............................



# ஐரோப்பிய வரலாறு - கிரேக்க உரோம காலம் முதல் கி.பி. 1989 ஆம் ஆண்டு வரை

**அறிவுறுத்தல்கள் :**

- முதலாம் வினா கட்டாயமானது.
- முதலாம் வினாவுக்கும் B - C பகுதிகளில் இருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து, மேலும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக. (எல்லாமாக நான்கு வினாக்கள்.)

## பகுதி A

**(01) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஐரோப்பிய புற உருவப்படத்தில் கீழே தரப்பட்ட அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | **பிரனீஸ் மலைத்தொடர்** | (ii) | **கருங்கடல்** | (iii) | **கொன்ஸ்தாந்திநோபிள்** |
| (iv) | **ஸீன் நதி** | (v) | **லண்டன்** | (vi) | **பால்டிக்கடல்** |
| (vii) | **ஆங்கிலக் கால்வாய்** | (viii) | **ரைன் நதி** | (ix) | **லிஸ்பன்** |
| (x) | **சுவிட்சர்லாந்து** | (xi) | **சுவீடன்** | (xii) | **கோர்சிக்கா** |

**(சரியாகக் குறித்துப் பெயரிட்டால் ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி)**

## பகுதி B

**(02) பின்வரும் தலைப்புக்களில் புராதன கிரேக்க கலாசாரத்தின் முனைப்பான பண்புகளை பரிசீலிக்குக.**

(i) **அரசியல் முறை**
(ii) **சமயம்**
(iii) **இலக்கியம்**

### (i) அரசியல் முறை

- புராதன கிரேக்கத்தில் அரசியல், சமூகம், பௌர அரசுகளை அடிப்படையாகக் கொண்டு நிலவியமை. அத்தகைய அரசுகள் பெரும் எண்ணிக்கையில் இருந்தன. அதென்ஸ், ஸ்பாட்டா, தீப்ஸ், மெகாரா, கொரிந்த், ஆர் கொஸ், மிலெட்டஸ், மைலின், சமோஸ் முக்கியமானவை.

- இந்தப் நகர பௌர அரசுகளிடையே பெருமளவு ஒரே மாதிரியான ஆட்சி பரவியதுடன் அவற்றில் பல்வேறு ஆட்சி நிலவியமை.

- முடியாட்சி முறை .................
அரசன் கடவுளிடமிருந்து அவதரித்துள்ளான் என்ற நம்பிக்கை இருந்தது. அவர்களுக்குப் பல சலு-கைகளும் மரியாதையும் அளிக்கப்பட்டிருந்தன. அரசனே பிரதான மதகுரு, நீதிபதி, படைத்தலைவர் எனக் கருதப்படல். கி.மு. 8 ஆம் நூற்றாண்டளவில் இம்முறை வீழ்ச்சி பெற்றமை.

- பிரபுக்கள் - முடியாட்சி வீழ்ச்சியுடன் இம்முறை எழுச்சி பெற்றமை. அரஸ்ரோட்டில் குறிப்பிட்டவாறு இம்முறையில் பிரபுக்களைக் கொண்டமைந்த நிலையான சபையினால் நிர்வாக நடவடிக்கைகள் கொண்டு செல்லப்பட்டமை. சலுகைகள் கொண்ட செல்வந்த பிரபுக்கள் குழுவிடம் நிர்வாக அதி-

காரம் மையப்படுத்தப்பட்டிருந்தமை. சமய அலுவல்கள் உட்பட நிர்வாக நடவடிக்கைகள் கொண்டு செல்லப்பட்டமை. சலுகைகள் கொண்ட செல்வந்த பிரபுக்கள் குழுவிடம் நிர்வாக அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருந்தமை. சமய அலுவல்கள் உட்பட நிர்வாக நடவடிக்கைகள் தெரிவு செய்யப்பட்ட பிரபுக்கள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டமை.

- சில்லோராட்சி (சில்லோராட்சி, செல்வராட்சி) ஆட்சி செல்வந்தரான சிறு குழுவினர் தமது நன்மைக்காக நடாத்திய ஆட்சிமுறை பிரபுக்கள் ஆட்சியின் பின்னர் தோன்றியது. காணி உரிதுடைமை மற்றும் எல்லா உரிமைகளும் இந்த ஆட்சியாளர் சிலர் பெற்றிருந்தமை மக்கள் அடக்கப்பட்ட ஆட்சிமுறையாக இருந்தமை. ஸ்பாட்டாவில் இம்முறை நிலவியதாகக் கருதப்படுகிறது. அரசர் இருவர் ஜேரூசியா – மூத்தோர் சபை, அபெலா அல்லது சபை என்ற நிறுவகங்கள் காணப்பட்டன. எனினும் உயர் அதிகாரம்.

- மக்கள் அடக்கு முறை ஆட்சி தன்னிலக்குழு அரசாங்க ஆட்சியின் கீழ் அதிக அடக்குமுறைக்கு உட்பட்ட மக்களின் ஆதரவுடன் அதிகாரத்துக்கு வந்த மக்களை அடக்கியோர் ஏகாதிபதிமாரினால் கூலிப்படையினர் உதவியுடன் ஆட்சியைக் கொண்டு நடத்தியமை.

- ஜனநாயகம் – மக்கள் அடக்கு முறை ஆட்சிமுறை கவிழ்க்கப்பட்டு இம்முறை தோற்றம் பெற்றது. ஆரம்பத்தில் குடிமக்களின் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட முறைமை. அதென்ஸ் அரசி ல் இம்மு றை றநன்கு செயற்பட்டமை. இந்த ஆட்சி பெரிக்கிளிஸ்ஸின் காலத்தில் வளர்ச்சி பெற்றதாகக் கருதப்படகிறது. அரசியல் கட்டமைப்பு – (a) ஒக்லீஷியா – மகாசபை. எல்லா மூத்த குடிமக்களும் பங்குபற்றும் இந்த சபையில் அரசுடன் தொடர்புடைய அனைத்து தீர்மானங்களும் வாக்கெடுப்பினால் பெற்றுக் கொள்ளுதல் (b) கவ்லே அல்லது ஐந்நூறு பேரின்பசபை எக்லிஷியாவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவகம். (கட்டிடங்கள் கட்டுதல், வெளிநாட்டுத் தொடர்புகள் கொண்டு நடாத்துதல் ஆகியவை) (c) நிறைவேற்று உத்தியோகத்தர் அதென்ஸில் நிலவிய ஜனநாயகம் குடிமக்கள் மட்டும் நிர்வாகத்தில் பங்குபற்றிய நேரடி ஜனநாயக முறைமையாகும்.

**(16 புள்ளிகள்)**

(ii) **சமயம்**

- இயற்கைப் பொருட்களுக்கு தெய்வத்தன்மை வழங்கி வழிபாடு செய்தல். கிரேக்கத்தில் தெய்வங்கள் பற்றி நிலவிய அச்சம் ஒனைய நாகரிகங்களுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகக் காணப்படுகின்றமை. உ– ம் தெய்வங்களுக்கு மனிதரூபம்

- தெய்வீக வம்சம் பற்றிய நம்பிக்கை – சியுஸ் (விண்ணுக்கான தெய்வம்) முதன்மையாகக் கொண்ட தெய்வ மண்டலம்.

- பல்தெய்வக் கோட்பாடு நிலவியமை

- கிரேக்க சமயம் சுயாதீன சிந்தனையைத் தடை செய்யாமை.

- பல்வேறு கலைகளின் விருத்திக்கு சமயத்தின் ஆதரவு கிடைத்தமை.

- கிரேக்களிடம் பெருமளவு சமய ஒற்றுமை காணப்பட்டமை.

(iii) **இலக்கியம்**

- கிரேக்க இலக்கியம் பல்வேறு பிரிவுகள் கொண்டது.
  வீர காவியங்கள் - ஹோமரின் இலியட், ஒடிஸி
  செய்யுள் இலக்கியங்கள் - பின்டார், ச வோர் ஆக்கங்கள்

- நாடகங்கள் - சோகம், மகிழ்ச்சி (நகைச்சுவை உட்பட)
  சோக முடிவு - ஈஸ்கிளிஸ் கொகோக்கிளிஸ்
  யூறிபிடிஸ் - ஆக்கங்கள்
  மகிழ்ச்சி முடிவு - அரிஸ் டொபனிஸ் - ஆக்கம்

- வரலாற்று நூல்கள் - ஹெரடோடஸ், துஸ்டிஸ் - ஆக்கங்கள்
  ஹெமுயட் - வேர்க் அன்ட் டேயிஸ்

3) **"நாடுகாண் பயணங்கள் ஏற்படுவதற்குப் பல்வேறு பொருளாதார, அரசியல், சமயம் சார் விடயங்கள் காரணங்களாகும்"**

(i) **ஆரம்பகால நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு வழங்கிய போர்த்துக்கேய இளவரசனின் பெயரினைத் தருக.**
கடலோடி ஹென்றி **(1 புள்ளி)**

(ii) **ஆரம்பகால நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட போர்த்துக்கேய நாடுகாண் பயணி ஒருவரினதும், ஸ்பானிய நாடுகாண் பயணி ஒருவரினதும் பெயர்களைத் தருக.**

- போர்த்துக்கல் - லோபோ கொன்சால்வேஸ், பார்த்தலோமியஸ்டயஸ், வஸ்கொடகாமா கப்ரால்
- ஸ்பானியா - கிறிஸ்தோபர் கொலம்பஸ் அமெரிக்கோ வெஸ்புக்குயி, பெர்டினன்ட் மகலன் - பெர்ணான்டோ, கோர்டிஸ், பிரான்சிஸ்கோ பிசாரோ

**(02 புள்ளிகள்)**

(iii) **போர்த்துக்கல் அல்லது ஸ்பானியாவில் முன்னெடுக்கப்பட்ட நாடுகாண் பயணங்கள் பற்றிச் சுருக்கமாக எழுதுக.**

**போத்துக்கல்**

- லோபோ கொன்சல்வேஸ்
- பார்த்தலோமியஸ் டயஸ் - ஆபிரிக்காவின் தென்முனைவரை பயணித்தல்
- வஸ்கொடகாமா - இந்தியாவின் கள்ளிக் கோட்டையை வந்தடைந்தமை
- கப்ரால் - பிரேசிலைக் கண்டுபிடித்தல்.

**ஸ்பானியா**

- கிறிஸ்தேபர் கொலம்பஸ் - கரிபியன் தீவுகளில் கரையேறியமை
- அமெரிக்கோ வெஸ்புக்கூயி - அமெரிக்கா கண்டத்தில் கரையேறியமை
- வஸ்கொ த பல்போவா - பனாமா வழியாகச் சென்று பசுபிக் சமுத்திரத்தை அணுகியமை.
- பெர்டினன் மகலன் - பிலிப்பைன் தீவுகளில் கரையேறியமை உலகை முதலில் சுற்றிப் பயணித்தமை.
- ஹர்னன்டோகோர்ட்ஸ் - மெக்சிக்கோவை கைப்பற்றியமை.
- பிரான்சிஸ்கோ பிசாரோ - பெரு தேசத்ததை கைப்பற்றியமை. **(04 புள்ளிகள்)**

(iv) **நாடுகாண் பயணங்கள் ஏற்படுவதற்குப் பல்வேறு அரசியல், பொருளாதார, சமயம்சார் அம்சங்கள் காரணமாகிய விதத்தினை பரிசீலிக்குக.**

- பொருளாதாரம் 1453 இல் கொன்ஸ்தாந்திநோப்பின் துருக்கியர் வசமான பின்னர் கீழைத்தேயங்களிலிருந்து ஐரோப்பாவுக்கு இருந்த வர்த்தகப் பாதை தடைப்பட்டதின் காரணமாக எழுந்த வர்ததக நெருக்கடிக்குத் தீர்வைக் கண்டறிதல் ஆசியாவின் வர்ததகப் பொருட்களை ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து இலாபம் ஈட்ட முடியும் என்ற எதிர்பார்ப்பும் அதற்கான வர்த்தகப் பாதையைக் கண்டறிய முன்வருதல்.

**அரசியல்**

- தேசிய அரசுகள் எழுச்சி பெற்றதோடு அந்த அரசுகளின் ஆட்சியாளர்களின் ஆதரவு கிடைத்தல் (ஸ்பானியா - பேர்டினட் உம் இஸபெல்லா) தேசிய அரசுகளுக்கிடையே எழுந்த போட்டி)

**சமயம்**

- முஸ்லிம்களின் அதிகாரத்தை அடக்குவதற்கு கத்தோலிக்க சமயத்தைப் பிரபலமாக்குதல் இதற்கு மேலாக வேறு விடயங்களாக விஞ்ஞான அறிவு விரிவடைதல் (வடதுருவ நட்சத்திரமானி, தொலைகாட்டி, திசையறிகருவி) ஆபத்தான அனுபவங்களைப் பெறுவதிலிருந்து ஆர்வம் ஆகியவை.

**(09 புள்ளிகள்)**

4)

**(i) கைத்தொழில் புரட்சி முதலில் இங்கிலாந்தில் ஏற்படுவதற்குக் காரணமான விடயங்களைப் பரிசீலிக்குக.**

- இங்கிலாந்தில் வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்து சென்றமை.
- பொருட்களின் கேள்வி அதிகரிப்பும் உற்பத்தியை விரிவாக்க வேண்டிய தேவை எழுதுதலும்.
- இங்கிலாந்தில் விஞ்ஞான, தொழினுட்ப அறிவும் சிந்தனையும் விருத்தி செய்தமை.
- வர்த்தக விருத்தி விரிவாக்கத்தின் பெறுபேறாக பணம்படைத்த செல்வந்தர் கூட்டம் தோன்றுதல்.
- கமத்தொழில் புரட்சி ( இரண்டாவது காணிகளைப் பிரித்தெடுக்கும் இயக்கம் ) காரணமாக காணி-களை இழந்த வேலையில்லாத குழுவொன்று இருந்தமை அவர்கள் வேலை தேடி நகரங்களுக்கு இடம்பெயர்த்தல்.
- கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள்கள் இலகுவில் பெறக்கூடியதாக இருந்தமை.

**(06 புள்ளிகள்)**

**(ii) கைத்தொழில் புரட்சியனால் ஏற்பட்ட தொழில்நுட்ப, பொருளாதார, சமூக விளைவுகளைப் பரிசீலிக்குக.**

**தொழினுட்ப**

- பறக்கும் நாடா - ஜோன்கே
- ஸ்பினிங் ஜென்னி - ஜேம்ஸ் ஹதக்கிரவ்ஸ்
- நீர்ச் சட்டம் - ரிச்சட் ஆக்ரைட்
- ஸ்பினிஸ் மியூஸ் - சாமுவேல் குறொம்டன்
- விசைத்தறி - எட்மன்ட் காரட்ரைட்
- நீராவி யந்திரம் - தோம்ஸ் நிவ்கொமன் - ஜேம்ஸ் - வாட்
- பாதுகாப்பு விளக்கு - ஹம்றி டேவி
- புகைப் படகு - றொபேட் புல்டன்
- புகையிரத எஞ்சின் - ஜோர்ஜ் ஸ்ரீவன்சன்

**பொருளாதாரம்**

- உற்பத்தில் முறைகளில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுதல்

- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்துக்குப் பதிலாக கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் தோன்றுதல்.

**சமூகம்**

- கைத்தொழில் பணக்காரர் தொழிலாளர் என புதிய சமூக வகுப்பினர் தோன்றுதல்.

- சனத்தொகைப் பரம்பலில் மாற்றம் ஏற்பட்டமை

- ஆரம்ப காலத்தில் தொழிலாளர் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் தொழில் செய்யும் நிலைமை காணப்பட்டமையும் பெரும் துன்பகரமான வாழ்க்கையைக் கொண்டிருந்தமையும்

- சூழல் மாசடைதல்.

**(10 புள்ளிகள்)**

**05) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாகச் சிறு குறிப்பு எழுதுக.**

(i) **உரோமப் பேரரசில் கிறிஸ்துவத்தின் வெற்றி**
(ii) **எதிர்மதசவ் சீர்திருத்தம்**
(iii) **பதினான்காம் லூயி**
(iv) **இங்கிலாந்தில் மகோன்னத பயிற்சி**

**(ஒரு சிறு குறிப்புக்கு 8 புள்ளிகள் வீதம்)**

(i) **உரோமப் பேரரசில் கிறிஸ்துவத்தின் வெற்றி**

- இயேசு பெருமான யூதாய் பிரதேசத்தில் பெத்தவ ஹேமில் யூதல் இனத்தவராக கி.பி. 1 ஆண்டிற்கு அண்மையிலான வருடத்தில் பிறந்த இவர் இளவயதில் புதிய சமயம் ஒன்றைப் போதிக்கத் தொடங்கியமை.

- அக்காலத்தில் பலஸ்தீனத்தில் புகமுடன் நிலவிய யூத சமயத்தில் இருந்த விடுதலை அளிப்பவர் என்ற கருதுகோளுக்கு ஏற்ப சிலர் அவரை விடுதலையளிப்பவர் எனக் கருதியமை.

- உரோம அதிகாரிகள் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொன்ற போதும் கிறிஸ்து சமயம் படிப்படியாக உரோமப் பேரரசில் பரவுதல்.

- இந்த சமயம் தமது அரசியல் அதிகாரத்துக்கு அச்சுறுத்தல் எனக் கருதிய உரோம ஆட்சியாளர் அதனை அடக்குவதற்கு முயற்சித்தனர். (செப்டிமியஸ் செவரூஸ். டெயிசியஸ், வலேரியன் டயக்லீஷியன்)

- கிறிஸ்தவத்தை அடக்குதல் பயனற்ற செயல் எனத் தோன்றியதால் உரோம ஆட்சியாளர்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளச் செயற்படுதல்.

- ஆரம்பத்தில் கிறிஸ்தவத்தை அடக்குவதற்கு செயற்பட்ட கலேரியன் தனது இறப்பதற்கு முன்னர் கி.பி. 311 இல் கிறிஸ்தவ சமயத்தைக் கைக்கொள்ள சுதந்திரம் வழங்குதல்.

- கி.பி. 312 இல் கொன்ஸ்டரயின் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக் கொண்டான்.

- திய டோனியஸ் கிறிஸ்தவத்தை உரோமப் பேரரசின் அரச மதமாக்கியதுடன் ஏனைய சமயங்களை அடக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

**(8 புள்ளிகள்)**

(ii) **எதிர்மதச் சீர்திருத்தம்**

- புரட்டஸ்தாந்து மதத்துக்கு எதிராக கத்தோலிக்க சபையினால் மேற்கொள்ளப்பட்ட எதிர் நடவடிக்கைகள் எதிர்மதச் சீர்திருத்தம் எனப்படுதல்.

- நோக்கம் - புரட்டஸ்தாந்து சமயக் கருத்துக்களை வீழ்ச்சியுறச் செய்தல், புரட்டஸ்தாந்து கருத்துக்கள் பரவுவதைத் தடுப்பதும் கத்தோலிக்க சபையின் அதிகாரத்தை மீண்டும் தாபித்தலும் பிரதான பிரிவுகள் யேசுசபை போன்ற மகாநாடு அதர்ம அடக்குநீதிமன்றம்.

**(8 புள்ளிகள்)**

(iii) **பதினான்காம் லூயி**

- இந்த மன்னன் 1643 இல் பிரான்சின் அரச பதவிக்கு நியமிக்கப்பட்டான். எனினும் ஆரம்பத்தில் அரச நடவடிக்கைகள் உண்மையில் மஸரினால் நடாத்தப்பட்டது.

- இவன் பிரான்சின் உண்மையான ஆட்சியாளனாக 1661 இல் மஸரினின் மரணத்தின் பின் செயற்பாடுகளை ஆரம்பித்தான்.

- 1715 வரை இவன் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தான்.

- ஐரோப்பாவில் அக்காலத்தில் இருந்த பலமிக்க அரசான பிரான்சில் சர்வாதிகார ஆட்சி இடம்பெற்றிருந்தது.

- "நானே அரசு" என்பது அவனின் பிரகடனம்

- அவன் அரசுரிமைக்கு தெய்வீக அருள் உரிமை பெற்றவனாகியமை

- அதிகாரம் மன்னனை மையப்படுத்தி கடுமையான மையப்படுத்தப்பட்ட அரசாகவும் வினைத்திறனான நிர்வாகப் பொறிமுறையைக் கொண்டு சென்றமை. இன்டென்டான்மாரின் நிர்வாகம்.

- பலம்மிக்க படை வலிமையைக் கொண்டிருந்தமை.

- கோல்கெயர் என்ற மந்திரியின் கீழ் நிதி நிர்வாகம் சீராக நடத்தியமையும் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுத்தியமையும்.

- கலாசார மறுமலர்ச்சி நிலவியமை. தாபித்தமை - நாடகக் கலை மறுமலர்ச்சி வேர்செயில்ஸ் அரண்மனை
- ஸ்பானியா, ஒல்லாந்து பரிசுத்த உரோமப் பேரரசு என்பவற்றுக்கு எதிராகப் போரிட்டமை.
- அருகிலிருந்த பிரதேசங்களை இணைந்து பிரான்சின் எல்லையை விரிவடையச் செய்தமை.

**(8 புள்ளிகள்)**

(iv) **இங்கிலாந்தில் மகோன்னத புரட்சி**

- அரசனுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் அதிகாரம் தொடர்பிலான போராட்டம்
- ஸ்ரூவர்ட்வம்ச அரசர்கள் அரசர்களின் ஆதிக்கத்தை பலப்படுத்த பாராளுமன்றத்தைப் பொருட்படுத்தாமல் செயற்படுதல். கத்தோலிக்கர்களான ஸ்ரூவர்ட் வம்ச அரசர்களுக்கும் புரட்டாஸ்தாந்து பாராளுமன்றத்துக்கும் இடையில் சமய விரோதம் ஏற்படுதல்.

**பின்னணி**

- 1642 சிவில் யுத்தம்
- 1649 - 1ஆம் சார்ள்ஸ் மன்னன் சிரச்சேதம்
- 2 ஆம் சார்ள்ஸ் மன்னனாகுதலும் கொடுங்கோல் ஆட்சியும்
- 1688 - புரட்சி

**விளைவு**

- பாராளுமன்றத்தின் உரிமை நிலைநாட்டப்படுதல்
- அரசனின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டமை
- 1689 உரிமைச் சட்டம்

**(8 புள்ளிகள்)**

# C பகுதி

06)

**(i) நெப்போலியன் போனபார்ட் பிரான்சில் அதிகாரத்தைக் கைப்பற்றிய முறையினைப் பரிசீலிக்குக.**

- 1769 இல் பிறந்த நெப்பொலியன் பிரான்சில் பரிசில் உள்ள இராணுவ கல்லூரியில் பெற்ற கல்வியின் பின்னர் பீரங்கிப் படையின் அதிகாரியாக நியமிக்கப்பட்டமை.
- 1793 டிசம்பர் மாதம் டுலோங் துறைமுகத்தைத் தாக்கிய ஆங்கிலப் படையை வெற்றிகரமாக முறியடித்தமை.
- 1796 இத்தாலி ஆக்கிரமிப்பின் போது பிரான்சின்
- 1798 இல் எகிப்து (நைல்) மீதான தாக்குதல் தோல்வியடைந்த போதும் நெப்போலியன் மக்களாதரவைத் தொடர்ந்து பெற்றிருந்தமை.
- 1799 நவம்பர் மாதம் அக்காலத்தில் நிலவிய பணிப்பாளர் குழுவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு துணையாக இருந்தமை.
- 1799 இல் முதலாம் கொன்சல் எனவும் 1802 இல் வாழ்நாள் நீடித்த கொள்சலாகவும் நியமிக்கப்பட்டமை.
- 1804 இல் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்டமை.

**(05 புள்ளிகள்)**

**(ii) நெப்போலியன் போனபார்ட்டின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு அவனுடைய சாதனைகளை மதிப்பிடுக.**

- உள்நாட்டுக் கொள்கை

**அரசியல்**

- சட்ட நிறைவேற்றம், நிர்வாகம் என்பவற்றின் அதிகாரம் 1 ஆம் கொன்சல்ரிடம் (பின்னர் சக்கரவர்த்தி) மையப்படுத்திய சர்வாதிகார ஆட்சி முறையைத் தாபித்தமை.
- பொதுமக்கள் கருத்துக் கணிப்பீடு மூலம் தனது செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் அனுமதியைப் பெற்றுக் கொண்டமை.
- மாகாண ஆட்சியை மையப்படுத்தலும் மாகாண ஆட்சி அலகுகளுக்கு மத்திய அரசினால் அதிகாரிகள் நியமிக்கப்படுதல்.
- நிர்வாக இணைப்பு ஏற்படுத்தப்படுதல்.

- திறமை அடிப்படையில் பதவிகள் நியமிக்கப்படலும் பதவியுயர்வுகளுக்கு இடமளிக்கப்படுதல்.

- சட்டத்தின் முன்னிலையில் சமத்துவம், தனியார் சொத்துக்களுக்கு உரிமை, மானிய முறை ஒழிக்கப்படுதல், அரசின் தன்மை என்பவற்றில் புரட்சி நோக்கம் கோட்பாடுகளைப் பாதுகாத்தலும் அவற்றுக்கு அனுமதி வழங்குதலும்.

- இருந்த போதும் பிரான்சியப் புரட்சியில் தாராளவாத (லிபரல்) நோக்கம் கவனம் கொள்ளாதிருத்தல்.

**கல்வி**

- பாடசாலைத் தொகுதி மறுசீரமைப்பு செய்தல்.

- விஞ்ஞான பாடம் கற்பித்தலுக்கு ஊக்கமளித்தல், வரலாறு, அரசியல், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் பாடசாலை கலைத்திட்டத்திலிருந்து நீக்கியமை.

- பிரான்சில் தேசிய பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டமை.

**பொருளாதாரம்**

- சுங்கவரி பாதுகாப்பு நடவடிக்கை, கடன் வசதிகள் வழங்குதல் மூலம் கைத்தொழில் விருத்திக்கு உதவுதல்.

- பெருந்தெருக்கள் கால்வாய் வழிகள் அமைத்தல் மூலம் வியாபார முன்னேற்றத்துக்கு வசதிகளை ஒழுங்குபடுத்தல்.

- வங்கிகள் தாபித்தல் நிதி முறைமையை மறுசீரமைப்பு செய்தல்.

**வெளிநாட்டுக் கொள்கை**

- பிரான்சை முதன்மையாகக் கொண்டு பேரரசு ஒன்றை உருவாக்குதலும் பிரான்சுப் புரட்சியின் சில நோக்கங்களைப் பரப்பும் நோக்குடன் நெப்போலியன் வெளிநாடுகளை ஆக்கிரமிப்பு செய்தல்.

- பிரான்சின் ஆதிக்கம் பரவுதல் சில பிரதேசங்களை நேரடி ஆதிக்கத்துக்கு உட்படுத்துதலும் வேறு சில பிரதேசங்களை பிரான்சுக்கு அடிமைப்பட்ட அரசாக்கிக் கொண்டமை.

- இந்த ஆக்கிரமிப்புகளின் விளைவாக ஐரோப்பாவின் அரசியல் பாடத்தில் பாரிய மாற்றம் ஏற்படுத்தல். இத்தாலி, ஜெர்மனி

- நெப்போலியன் விரிவாக்கல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஏனைய ஐரோப்பிய வல்லரசுகளில் பெரும்பாலானவை பிரான்சுக்கு எதிராக போர்க் கூட்டமைப்பை ஏற்படுத்தி பிரான்சை எதிர்த்துப் போரிட்டமை.

- இங்கிலாந்தைப் பொருளாதார ரீதியில் நலிவடையச் செய்வதை நோக்கமாகக் கொண்டு 'கண்ட முறை' என்பதை நடைமுறைப்படுத்தியமை.

- இறுதி பிரான்ஸ் விரோத யுத்த கூட்டமைப்பின் தாக்குதலில் நெப்போலியன் தோல்வியடைந்தமை.

**(11 புள்ளிகள்)**

**7) "ஜெர்மனியை ஐக்கியப்படுத்தல் பிரஷ்யாவின் பணியாக இருந்தது"**

(i) **பிரஷ்யாவின் தலைமையில் அமைக்கப்பட்ட சுங்க சங்கத்தின் பெயரினைத் தருக.**

சொல்வரைன் **(1 புள்ளி)**

(ii) **1848 இன் முன்னர் ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவதற்கு எதிராக நிலவிய இரண்டு தடைகளைக் குறிப்பிடுக.**

- அரசு 39 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தமை.
- ஆஸ்திரியா ஆதிக்கமும் செல்வாக்கும்
- மெட்டனிர்க் முறை
- வியன்னா ஒப்பந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்திருந்தமை.
- ஒன்றிணைப்பு பற்றிய தேசிய எண்ணக்கரு போதியளவில் பிரபலம் பெற்றிருக்காமை.
- ஜெர்மனிய ஒன்றிணைப்பதில் தனியான வேலைத்திட்டத்துக்குப் பதிலாக பல்வேறு செயன்முறைகள் முன்வைக்கப்பட்டமை.

**(2 புள்ளிகள்)**

(iii) **பிஸ்மார்க் பிரஷ்டியாவின் சான்சிலர் பதவியை அடைந்த முறையினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.**

- ஜெர்மனியை ஒன்றிணைக்கும் நடவடிக்கையின் முக்கிய தலைவராக ஒடோ பொன் பிஸ்மார்க் 1815 இல் பிரசியாவின் நிலவுரிமை கொண்ட ஜுன்கர் பிரபு பரம்பரையில் பிறந்தவர்.
- 1847 வரை பிரஷ்யாவின் டயற் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்ட அவர் பழைமை வாதியாக இருந்தமை. 1848 - 49 புரட்சியின் போது புரட்சிவாதிகளுக்கு பெரும் எதிர்ப்பு தெரிவித்த பிஸ்மார்க் முடியரசை பாதுகாப்பதற்கு பிரஷ்யாவினுள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை.
- 1862 இல் பிரஷ்ய பாராளுமன்றத்தில் லிபரல்வாதிகளுக்கும் மன்னனுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சந்தர்ப்பத்தில் அதனைத் தீர்ப்பதற்கு பிரஷ்யாவின் சான்சிலாக நியமிக்கப்பட்டமை.

**(2 புள்ளிகள்)**

**(iv) ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் முக்கிய கட்டங்களில் கவனம் செலுத்தி ஜேர்மனியை ஐக்கியப்படுத்தலில் பிரஷ்யாவின் வகிபாகத்தைப் பரிசீலிக்குக.**

- 1834 இல் பிரஷ்யாவின் தலைமையில் தாபிக்கப்பட்ட சொல்வரின் சுங்கவரி சங்கம் மூலம் ஜெர்மன் அரசுகளுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட்டமை.
- இதன் மூலம் அரசியல் ஒன்றிணைப்புக்கான வழி ஏற்பட்டமை.
- 1862 இல் பிஸ்மார்க் பிரஷ்யாவின் சான்சிலர் பதவிக்கு நியமிக்கப்பட்டமை. அவன் பிரஷ்யாவின் தலைமையில் பிரஷ்யாவின் ஆதிக்கத்தை ஜேர்மன் முழுவதும் பரப்புவதற்கு ஜெர்மனியை ஒன்றிணைப்பதற்குத் திடசங்கற்பம் கொண்டிருந்தமை.
- பிரஷ்யாவின் இராணுவத்தை பலப்படுத்தியமை 1864 ஷ்லெஸ்விக் ஹெல்ஷ்டயின் முதன்மையாகக் கொண்டு ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவினால் டென்மார்க்கை தோற்கடித்தமை.
- 1866 ஆஸ்திரியா பிரஷ்யாவுக்குமிடையிலான ஒரு போர் பிரஷ்யா ஜெர்மனியின் முதலாவதும் வலிமை மிக்கதுமான இயக்கமாக வெளிப்பட்டமை.
- பிரஷ்யாவின் தலைமையில் வட ஜெர்மனி கூட்டாட்சி தாபிக்கப்பட்டமை.
- 1870 - 71 பிரான்ஸ் பிரஷ்ய போர் தெற்கு ஜேர்மன் வட ஜெர்மன் கூட்டாட்சியுடன் இணைக்கப்பட்டமை.
- மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் நிகழ்வுகளை பகுப்பாய்வு செய்து ஜெர்மனியை ஒன்றிணைப்பதில் பிரஷ்யாவின் வகிபாகத்தை பரிசீலித்தல் வேண்டும்.

**(11 புள்ளிகள்)**

**08) இரண்டாம் உலகப் போரின் முக்கிய விளைவுகளைப் பகுப்பாய்வு செய்க.**

- நட்பு நாடுகளினால் இத்தாலி, ஜெர்மனி தோற்கடிக்கப்பட்ட பின்னர் ஹிரோஷிமா, நாகசாகி மீது அணுகுண்டுகள் வீசப்பட்டதின் பின்னர் ஜப்பான் நிபந்தனையின்றி அடிப்பணிந்ததுடன் 2 ஆம் உலக மகாயுத்தம் முடிவடைந்தது.
- 1 ஆம் உலகப் போர் இறுதியில் கையொப்பமிடப்பட்ட வேர் செயில்ஸ் மகாநாடு போன்ற சமாதான மகாநாடு இப்போரின்
- மனித வரலாற்றின் இதுவரை காலப்பகுதியில் பேரழிவை ஏற்படுத்திய போர் இறந்தவர்களின் எண்ணிக்கை 30 மில்லியனுக்கும் அதிகம். (இவர்களில் அரைப்பங்குக்கு அதிகமானோர் ரஷ்யர்கள்) அழிவடைந்த பௌதிக வளங்கள் பெறுமதி அளவிட முடியாதவை. அணுகுண்டினால் ஹிரோஷிமா நாகசாகி நகரங்கள் அழிவடைதல்.

- உலக வல்லாதிக்கம் மாற்றமடைதல். உலகில் ஐரோப்பாவில் ஆதிக்கம் முடிவடைந்தமை.
- ஐக்கிய அமெரிக்க அரசுகள் சோவியத் தேசம் உலகின் வல்லாதிக்கம் உடையனவாக எழுச்சி பெறுதல். உலகம் இரு வஃல்லாதிக்க அணிகளாகப் பிரிந்தமை.
- மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஐக்கியமாகச் செயற்படுதல்.
- ஐரோப்பிய நாடுகள் நடைமுறைப்படுத்திய வெளிநாட்டு ஆதிக்கம் வீழ்ச்சியடைவதற்கு வழியேற்படுத்தியமையும் ஆசிய ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்றமையும்
- ஒலக சமதானத்தைப் பேணுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தாபிக்கப்பட்டமை.

**(16 புள்ளிகள்)**

**09) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.**

(i) **ஜேர்மனியின் நாஸிசம்**

(ii) **ஜோசப் ஸ்டாலின்**

(iii) **ஐக்கிய நாடுகள் சபையின் இலக்குகளும், அமைப்பும்**

(iv) **பனிப்போர்**

(i) **ஜேர்மனியின் நாஸிசம்**

- 1ம் உலகப் போர் முடிவடைந்து சிறிது காலத்தின் பின்னர் அடோல்ப் ஹிட்லரின் கீழே ஜெர்மனியில் ஏற்படட சர்வாதிகார நோக்கும் ஆட்சிமுறையும் நாஸிஸவாதம் எனப்பட்டது.
- வேர்செயில்ஸ் உடன்படிக்கையினால் ஜெர்மனிமீது விதிக்கப்பட்ட மிகக் கடுமையான நிபந்தனைகள், வைமர் கூட்டாட்சியின் தோல்வி கடும் பொருளாதார நெருக்கடி என்பதை நாசிஸவாதம் எழுச்சியடைய பிரதான காரணங்கள்

**நாசிசவாதத்தின் முக்கிய பண்புகள்**

- ஆட்சியாளன் (ஹிட்லர்) முழுமையான சர்வாதிகாரி
- தேசிய சமவுடைமைக் கட்சி தவிர்ந்த ஏனைய அனைத்து கட்சிகளும் தடைசெய்யப்பட்டமை.
- பாராளுமன்ற சபையின் அதிகாரம் நீக்கப்பட்டமை.
- யூதர்கள் அரசின் எதிரிகள் எனக்கருதி பதவிகளிலிருந்து விலக்கப்பட்டமை.
- தொழிற்சங்கங்களை தடை செய்யாமை
- கல்விமுறை, நாஸிஸவாதத்தின் கடுந் தாக்கத்துக்குள்ளானமை.

- தொடர்பாடல் முறைகள் அரசினால் கடுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டமை.
- பொருளாதாரம் அரசின் மூலம் நிர்வகிக்கப்பட்டமை.
- சமயங்கள் அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமை.
- அடிப்படைவாதியும் இணைவாதியும் - யூதர் மீது பகைமையும் யூதர்களையும் வேறு அரசியல் கைதிகளையும் கொலை செய்தல்.
- ஜெர்மனியை பொலிஸ் அரசாக ஆக்கியமை.
- ஹிட்லரின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் 2 ஆம் உலகப் போர் ஏற்படத் தாக்கம் செலுத்தியமை.

**(8 புள்ளிகள்)**

(ii) **ஜோசப் ஸ்டாலின்**

- 1879 ஜோர்ஜியாவில் பிறந்து 1904 இல் போல்ஷ்விக் கட்சியில் இணைந்து 1917 இல் போல்ஷ் விக் புரட்சிக்குத் தலைமை தாங்கியமை
- 1929இல் லெனின் மரணத்தின் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலாளர் பதவி வகித்தமை.
- சோவியத் நாட்டின் தலைமைத்துவத்துக்காக ட்ரொஸ்ட்கியோடு போட்டி ஏற்பட்டமை.
  (ஸ்டாலின் தனிநாட்டு சோக்ஷலிசம் ஸ்ரொஸ்கியின் ............... நிரந்தரப் புரட்சி எண்ணக்கரு வேறுபாடு 1929 இல் ஸ்டாலின் அதிகாரத்துக்கு வருதல்.
- கம்யூனின்ஸ்கட்சியின்பொதுச்சபையின்உறுப்பினர்கள்அனைவரும்கட்சியிலிருந்துவிலக்கப்பட்டமை.
- சோவியத் நாட்டில் கைத்தொழில் முன்னேற்றத்தை ஏற்படுத்திய பின்னர் ஓராண்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலும் அவற்றிலிருந்து சாதகமான விளைவுகளைப் பெறுதலும்.
- விவசாய முன்னேற்றத்திற்காக கூட்டுறவு விவசாயம் பண்ணைகளை ஆரம்பித்தல், இதன் மூலம் பயனுள்ள விளைவுகள் ஏற்பட்ட போதும் விவசாயிகள் பெருமளவு துன்பங்களை எதிர்நோக்கியமை.
- சோவியத் நாட்டினுள் கடும் சர்வாதிகார நிர்வாகம் நடைமுறைப்படுத்தல்.
- 2ஆம் உலகப் போரின்போது நேசநாடுகளுடன் இணைந்து பாஸிஸவாதத்துக்கு எதிராகப் போரிட்டமை.
- கம்யூனிஸவாதம் பரவுவதற்கு நடவடிக்கை எடுத்தமையும் அதற்கு சமமாக பனிப்போர் கடுமையா-குதலும்.
- 1953 இல் மரணமடைதல்

**(8 புள்ளிகள்)**

(iii)ஐக்கியநாடுகள் சபையின் இலக்குகளும், அமைப்பும்

**நோக்கம்**

- சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல்.
- நாடுகளுக்கிடையில் நட்புறவை வளர்த்தல்.
- பொருளாதார, சமூக, கலாசார மனிதாபிமான ரீதியில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்.
- மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் என்பவற்றை உறுதி செய்வதிலும் சர்வதேச ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளுதல்.
- இப்பொழுது நோக்கங்களை அடைவதற்குரிய சர்வதேச மத்திய நிலையமாகச் செயற்படுதல்.

**கட்டமைப்பு**

- முக்கிய நிறுவகங்கள் 6
  1. பொதுச்சபை
  2. பாதுகாப்புச் சபை
  3. சமூக பொருளாதார சபை
  4. நம்பிக்கைப் பொறுப்புச் சபை
  5. செயலகம்
  6. சர்வதேச நீதிமன்றம்

**(8 புள்ளிகள்)**

(iv) **பனிப்போர்**

- 2ஆம் உலகப்போர் முடிவடைந்ததோடு பெரும்பான்மையினரிடையே நிலவிய நட்புறவு வீழ்ச்சியடைந்து அவற்றைச் சுற்றிவல்லாதிக்க முகாம்கள் இரண்டு தோன்றின.
  1. ஐக்கிய அமெரிக்க அரசுகள் தலைமையிலான செல்வந்த ஜனநாயக நாடுகள்
  2. சோவியத் ரக்ஷ்யா தலைமையிலான சமவுடைமை கம்யூனிஸ்ட் நாடுகள், முகாம்களுக்கிடையே நம்பிக்கையின்மை அதிகரித்த்தர்.
- சோவியத் அரசினால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் கம்யூனிஸ்ட் அரசு தாபிக்கப்பட்டமை.
- அமெரிக்கா அணுகுண்டுகள் வைத்திருந்தமை
- இரண்டு அணிகளுக்கும் இடையே அரசியல் எதிரப்பு நிலவியமை
- 1947 மார்ச் பிரகடனத்தின்படி நியமிக்கப்பட்ட ட்ரூமன் கோட்பாட்டின்படி
- சுதந்திர நாடுகளின் பாதுகாப்பு அவற்றுக்கு எதிரான ஆதிக்கத்துக்கு எதிராக ஐக்கிய அமெரிக்க அரசுகள் உதவி வழங்குவதற்கு வழங்கப்பட்ட இணக்கம் அதற்கேற்ப கிரிஸில் கம்யூனிசம் எழுச்சி பெறுவதை அடக்குதல்.

- மார்க்ஷல் திட்டம் மூலம் ஐரோப்பா மீண்டும் எழுச்சி பெற உதவி வழுங்குதலினூடாக கம்யூனிஸ்ட் பரவுதலைக் கட்டுப்படுத்த முயற்சித்தல்.

- 1949 இல் நேட்டோ அமைப்பு தாபிக்கப்படுதல்.

- இதன் பிரதிபலிப்பாக சோவியத் முகாம் 1955 இல் வார்சோ தாபிக்கப்பட்டமை.

- நேரடியாகப் போரில் பங்குபற்றாது ஒன்றுடன் ஒன்றாக முகாம்களுக்கிடையில் இடம்பெற்ற போராட்டங்களாக இருந்தமை.

- இம்மோதல்கள் பாதுகாப்பு பொருளாதாரம் அரசியல் அரசுகளுக்கிடையிலான தொடர்புகள் கலாசாரம் ஆயுத உற்பத்தி விண்வெளி ஆய்வு எல்லாத் துறைகளுக்கும் பரவுதல்.

- பேரரசுகளுக்கிடையில் போர் நடைபெறாவிடினும் உலகின் பல்வேறு பிரதேசங்களில் ஏற்பட்ட மோதல்களுக்கு இந்நிலைமையின் தாக்கம்.
  - பேர்னின் நெருக்கடி - 1948 - 1585
  - கொரியப் போர் - 1950
  - ஹங்கேரிய நெருக்கடி - 1956
  - செக்கஸ்லோவேக்கிய ஆக்கிரமிப்பு
  - கியூபா (மீசெயில்) நெருக்கடி
  - வியட்நாம் பிரச்சினை

- 1985 மிக்கேல் கொபர்சேவ் சோவியத் ரக்ஷ்யாவின் சனாதிபதியாக நியமிக்கப்பட்டதும் இரு முகாம்களினதும் கருத்து வேறுபாடகளைத் தணிப்பதற்கு ஆரம்பித்தமையும் படிப்படியாக கெடுபிடிப் போர் நிலைமை நலிவுற்றமையும்.

- சோவியத் ரக்ஷ்யாவின் குடியாட்சி வீழ்ச்சியடைந்தமை

- ஐரோப்பாவில் கம்யூனிச நாடுகள் சோவியத்தின் பிடியிலிருந்து விடுதலையடைந்தமை.

- வார்சோ ஒப்பந்த ஒழுங்கமைப்பு முடிவுற்றமை.

**(08 புள்ளிகள்)**